

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஊரக பகுதிகளில் அரசு துறைகளின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் சென்று சேரும் வகையில் மக்களுடன் முதல்வர் என்ற திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், குணசீலத்தில் 15.07.2024 அன்று நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்து, பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா. பிரதீப் குமார், முசிறி சட்டமன்ற உறுப்பினர் ந.தியாகராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ர.ராஜலட்சுமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தேவநாதன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) ரமேஷ் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




திருக்கோவிலூர் தொகுதி ஒதியத்தூர் ஆர்.சி. துவக்க பள்ளியில் உலகிற்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் சி.பழனி, விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன், தயா. இளந்திரையன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், ஆ.சா.ஏ.பிரபு, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் இராஜிவகாந்தி, நகரச் செயலாளர் கோபிகிருஷ்ணன், ஒன்றிய குழு தலைவர் தனலட்சுமி உமேஷ்வரன், ஒன்றிய குழு துணை தலைவர் மணிவண்ணன், ஒன்றிய நிர்வாகிகள் காத்தவராயன், ஜெகன், சாந்தகுமார், கண்ணன், இளைஞர் அணி அய்யப்பன், ஜீவா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திருத்துறைப்பூண்டி ஒன்றிய முன்னாள் செயலாளர் எஸ்.பி.முருகதாஸ் இல்லத் திருமணம்!

## பூண்டி.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவாரூர்,ஜூலை20.

திருத்துறைப்பூண்டி ஒன்றிய முன்னாள் செயலாளர் மறைந்த எஸ்.பி.எம். என்கிற எஸ்.பி.முருகதாஸ் அவர்களின் மகனும், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளருமான மு.போஜராஜன் - ர.புவனேஸ்வரி ஆகியோரின் திருமண விழா திருத்துறைப்பூண்டியில் நடைபெற்றது. கழகத்தினர் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.

முன்னாள் ஒன்றிய செயலாளர் மறைந்த எஸ்.பி.எம். என்கிற எஸ்.பி.முருகதாஸ் அவர்களின் மகனும், மாவட்ட பிரதிநிதியும் , திருத்துறைப்பூண்டி அரசு வழக்கறிஞரும் நோட்டரியுமான எஸ்.பி.பாஸ்கர், ஒன்றியக்குழு உறுப்பினர் சரஸ்வதி - எஸ்.பி.ராமகிருஷ்ணன் ஆகியோர்களது அண்ணன் மகனுமான, திருவாரூர் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் மு.போஜராஜன் -ர.புவனேஸ்வரி ஆகியோரது திருமண நிகழ்வில் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ.பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

இந்தத் திருமண நிகழ்வில் முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா, மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ்.பாண்டியன், ப.ஆடலரசன், நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன், ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், வழக்கறிஞர் எம்.ராமகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் ப.பிரகாஷ், வீ.எஸ்.ஆர். தேவதாஸ், இரா.மனோகரன், பால.ஞானவேல், கீழையூர் கோவிந்தராஜன் ,வடலூர் ராஜேந்திரன், வாரை எஸ். பிரகாஷ்,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் எம்.என். ராஜா,மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் குன்னலூர் அன்பழகன் , பொறியாளர் அணி அமைப்பாளர் இரா. கி.பிரபாகரன், தலைவர் ஆர்.வி.எல்.ரவிச்சந்திரன் , துணை அமைப்பாளர்கள் ஆர்.பிரபாகரன்,ஸ்டாலின் மற்றும் சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் சிக்கந்தர், வினோத்குமார், பாஸ்கர், ஜாகிர், ஓம்.சக்தி கண்ணன், பாலு, இளையராஜா, மற்றும் கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் கிளைக்கழக, வார்டுகழக நிர்வாகிகள். கழக தோழர்கள் பெருந்திரகளாக பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

### விழுப்புரம் மாவட்டம் – வல்லம் ஒன்றியம்

# நாட்டார் மங்கலத்தில் ‘மக்களுடன் முதல்வர்’ திட்டம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜூலை 20-

தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும் எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் ஊரகப் பகுதிகளில் கடந்த 11ஆம் தேதி தர்மபுரியில் முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார் .

இதை அடுத்து விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் நாட்டார் மங்கலம் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்டம் தொடங்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி தலைமை தாங்கினார்.

ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் தரணி வேந்தன், வல்லம் ஒன்றிய பெருந் தலைவர் அமுதா ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சமூக பாதுகாப்பு திட்டத்தின் துணை ஆட்சியர் முகுந்தன் அனைவரையும் வரவேற்றார்.

கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி ஸ்ருதன் ஜெய் நாராயணன் திட்ட விளக உரையாற்றினார்.


பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து சாலைகள் துறை

பே.சா.து.ந.க.எண்.பி3/ 2728 /2024 குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**Relaying of BT road at Swamy Sivanandha Salai & Island Ground in Zone - 5 & 9**

பணியின் உத்தேச தொகை குறைந்தபட்சம் **ரூ.135.00 லட்சம்**
முன்வைப்பு தொகை: மொத்த பணியின் உத்தேச தொகையில் **1%**

**ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : 30.07.2024 அன்று மாலை 3.00 மணி வரை**

**ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : 31.07.2024 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2444 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து**


நிகழ்ச்சியில் சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் திட்டத்தினை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களை பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்காக அவர் அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றாண்டு காலத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பெண்கள் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் .

அந்த வகையில் ஊரகப் பகுதிகளில் உள்ள ஏழை எளிய மக்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் ஒரு தனி துறையை உருவாக்கி மக்கள் மீது அக்கறையுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களுடன் முதல்வர்திட்டத்தை தொடங்கி உள்ளார்.

இத் திட்டத்தின் கீழ் பெரப்படுகின்ற மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு பொது மக்களின் கோரிக்கை மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்படும் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் உறுதிபட தெரிவித்தார்.

நிகழ்ச்சியில்மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவகுமார், செஞ்சி வட்டாட்சியர் ஏழுமலை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உதய குமார், இளங்கோ, ஒன்றிய செயலாளர்கள் துரை ,இளம்வழுதி, மாவட்ட கவுன்சிலர் அன்பு செழியன், மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் அணி அமைப்பாளர் தமிழரசன், மாவட்ட சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் கார்வண்ணன், ஊராட்சி மன்ற தலைவர் மாரியம்மாள் மண்ணாங்கட்டி.உள்ளிட்ட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் வளர்மதி நன்றி கூறினார்.



பெரம்பலூர் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன் உடல்நலக்குறைவாய் இருப்பதையறிந்து, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவரது இல்லம் சென்று நலம் விசாரித்தார். மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவர் அணி இணை செயலாளருமான டாக்டர்.இரா. இலட்சுமணன் விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கோலியனூர் கிழக்கு ஒன்றியம், செங்காடு, அரசு உதவி பெறும் ஆர்.சி நடுநிலைப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை துவக்கி வைத்தார். உடன் பி.தெய்வசிகாமணி, இ.சச்சிதானந்தம், இரா.கேசவன், இரா.கண்ணப்பன், ஜி.தவமணி, சௌந்தரராஜன், ஜெயலட்சுமி குணசேகரன், சிவசங்கர், குணசேகரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நன்னாடு முத்துசாமி, ஒன்றிய துணை செயலாளர்கள் ரீதர், ஜெயந்தி ராஜகணேஷ், ஊராட்சி மன்ற தலைவர் மணிவேல், கிளைச் செயலாளர்கள் லூகாஸ், நந்தகோபால், அந்தோணி ராஜ், பாபு அண்ணாதுரை மற்றும் ஜான் மார்கல், ஹரிபுத்திரன், முருகையன், ராஜ்குமார், பிரபு, ஆரோக்யதாஸ், வேளாங்கன்னி ஆகியோர் கலந்துகொண்டனர்.

### நீலகிரியில் கடும் மழை – மீட்புப் பணிகளுக்கு

# தயார் நிலையில் மாநில பேரிடர் மீட்புப் படையினர்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

நீலகிரி, ஜூலை 20-

நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவ மழையினால் மண் சரிவு ஏற்பட்ட இத்தலார் உள்ளிட்ட பகுதிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், இத்தலார் ஊராட்சியில் தென்மேற்கு பருவ மழையினால் மண் சரிவு ஏற்பட்ட பகுதிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (18.07.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர்சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்த வண்ணம் உள்ளது. இத்தலார் பகுதியில் நேற்றைய முன்தினம் மற்றும் நேற்றைய தினம் ஆகிய இரண்டு நாட்கள் அதிகளவில் மழை பெய்ததால் தடுப்புச்சுவர் இடிந்து, அந்த மண் வீடுகளுக்குள் புகுந்துள்ளது. ஆகவே, வருவாய்த்துறையினருடன் இணைந்து இப்பகுதிக்கு வருகை தந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இப்பகுதி வாழ் மக்கள் தடுப்புச்சுவர் கட்டித்தருமாறு கோரிக்கை வைத்துள்ளனர். அவர்களது கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, இந்த ஆண்டுக்குள் தடுப்புச்சுவர் கட்டித்தர உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட நிர்வாகம் பருவ மழை முன்னேற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் தென்மேற்கு பருவ மழையை எதிர்கொள்ள வட்டார அளவில் தமிழ்நாடு மாநில பேரிடர் நிவாரணக் குழுக்கள் தயார் நிலையில் உள்ளனர்.

மாநில பேரிடர் மீட்பு படையினரை பொறுத்தவரை குந்தா பகுதியில் 10 நபர்களும், கூடலூர் பகுதியில் 10 நபர்களும், பந்தலூர் பகுதியில் 10 நபர்களும் அங்கேயே தங்க வைக்கப்பட்டு, தயார் நிலையில் இருந்து, மழை மற்றும் காற்றின் காரணமாக சாலையில் விழும் மரங்களை உடனடியாக அப்புறப்படுத்தி பொது மக்களுக்கு எவ்வித சிரமமமின்றி நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், வருவாய்த்துறை, தீயணைப்புத்துறை, நெடுஞ்சாலைத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம் உள்ளிட்ட பல்வேறு துறைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் முன்னேற்பாடு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் பொதுமக்கள் எவ்வித அச்சமும் அடைய தேவையில்லை.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், உதகை ஊராட்சி ஒன்றிய தலைவர் மாயன் (எ) மாதன், உதகை வருவாய் கோட்டாட்சியர் மகராஜ், குந்தா வட்டாட்சியர் திருமதி. கலைச்செல்வி, உதகை வட்டார வளர்ச்சி அலுவலர் அண்ணாதுரை, மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் உமாசங்கர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ், இத்தலூர் ஊராட்சி தலைவர் பந்தையன் உட்பட பலர் உடனிருந்தனர்.

### சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி

# தேவபாண்டலத்தில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்!

## உதயசூரியன் எம்.எல்.ஏ. பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றார்!

கள்ளக்குறிச்சி சங்கராபுரம், ஜூலை 20.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தேவபாண்டலம் கிராமத்தில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெற்றது,

முகாமிற்கு மாவட்ட வருவாய் அலுவலர் சத்ய நாராயணன் தலைமை தாங்கினார். ஒன்றிய குழு தலைவர் திலகவதி நாகராஜன், அட்மா குழு தலைவர் ஆறுமுகம்,சங்கராபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் ரோஜா ரமணி, பேரூர் கழக செயலாளர் துரைதாகப்பிள்ளை, சங்கராபுரம் வட்டாட்சியர் சசிகலா, சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் கோபாலகிருஷ்ணன், ஒன்றிய கவுன்சிலர் அம்பிகா வீரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். அ. பாண்டலம் ஊராட்சி மன்ற தலைவர் பாப்பாத்தி நடராஜன் அனைவரையும் வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் மக்களுடன் முதல்வர் முதல்வர் திட்ட முகாம் குறித்து விளக்க உரையாற்றி அதன் பயன்களை எடுத்துக்கூறி பொதுமக்களிடம் மனுக்களை பெற்றார்.

இந்த முகாமில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மோகன்குமார், செல்வபோதகை, ஒன்றிய குழு தலைவர்கள் கள்ளக்குறிச்சி அலமேலு ஆறுமுகம், கல்வராயன்மலை சந்திரன், சின்னசேலம் ஒன்றிய குழு துணைத்தலைவர் அன்புமணிமாறன், ஊராட்சி மன்ற தலைவர்கள் கோவிந்தம்மாள் அருள்ஜோதி, வாசுகி கருணாநிதி, அன்பு அன்பரசு. ஜெயக்குமார், அய்யம்மாள் ராஜேந்திரன், அலெக்சாண்டர்,

அன்பழகன், ஜீவா கொளஞ்சியப்பன், வைத்தியநாதன், சங்கரன், காந்திமதி தர்மலிங்கம், ஒன்றிய கவுன்சிலர்கள் பலர் கலந்து கொண்டனர்,மேலும் பாண்டலம் குளத்தூர், மூக்கனூர், ஊராங்கனி, எஸ்விபாளையம், தியாகராஜபுரம் உள்ளிட்ட கிராம பகுதிளிலிருந்து ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு மனுக் களை கொடுத்தனர். இதில் 1418 மனுக்கள் பெறப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபுவின் தலைமையில்

# தஞ்சை கூத்தரசனின் தம்பி மெ.மணியின் மணிவிழா!

## சென்னையில் நாளை மாலை நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 20-

தி.மு.க. தலைமை இலக்கிய அணியின் புரவலர் தஞ்சை.கூத்தரசனின் தம்பி மெ.மணி - ம.சாந்தி தம்பதியரின் (61வது ஆண்டு பிறந்த நாள் விழா) மணிவிழா நாளை (21.7.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணியளவில் சென்னைபுரசைவாக்கம் அருகிலுள்ள பெருமாள் பேட்டை இராட்லர் தெருவில் (அவதானம் பாப்பையர் சாலை டவ்டன் மணிகூண்டு ஆகியவற்றின் இடையில் உள்ள தெரு) அமைந்துள்ள எஸ்.ஆர்.மகால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

விழாவிற்கு தலைமையேற்று அமைச்சர் பி.கே. சேகர்பாபு நடத்தி வைத்து வாழ்த்துரையாற்றுவார்கள் மற்றும் டி.கே.எஸ்.இளங்கோவன், மாம்பலம், ஆ.சந்திர சேகர், அரிமா நா.சந்திரபாபு ஆகியோரும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகளும் வாழ்த்திப் பேசுகின்றனர்.



நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், இத்தலார் ஊராட்சியில் தென்மேற்கு பருவ மழையினால் மண் சரிவு ஏற்பட்ட பகுதிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (18.07.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், உதகை ஊராட்சி ஒன்றிய தலைவர் மாயன் (எ) மாதன் உட்பட பலர் உள்ளனர்.